

பாமாலை 549 A ஆ ! களி கூர்ந்து பூரித்து

1 ஆ ! களி கூர்ந்து பூரித்து

மகிழ் என் உள்ளமே;

அன்புள்ள கர்த்தர் உனது

அனந்த செல்வமே. X3

2 நெஞ்சத்தில் ராவும் பகலும்

விசாரம் ஏன்? இனி

உன் சிந்தனை அனைத்தையும்

கர்த்தாவுக்கொப்புவி. X3

3 உன் சிறு வயது முதல்

பராமரித்தாரே;

கர்த்தாவால் வெகு மோசங்கள்

விலக்கப் பட்டதே. X3

4 அதாலே நீ கர்த்தாவுக்கு

நற் பிள்ளைக் கேற்றதாய்

எப்போதும் கீழ்ப்படிந்திரு,

அப்போது வாழுவாய். x3